**Tiaano®** Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2012-2013

- **Endeavor** : QUALITY
  Turnover Target : 100% ↑
- **Products for ...**
  Consumer Market : 3%
  Green Environment : 25**%**
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  Up to Oct. 12 : 620 Nos.
  Up to Sep.12 : 603 Nos.
- **Performance Oct.12 ...**
  Turnover growth : 1%
  Employment growth : Nil
  100% Attendance : 20.4%

## MANAGEMENT

- **Managing Director**
  Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  Ms. P.E. Nancy
  Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels &Tanks

HydroGen Go Green – HHO Generators

Titanictrade We Deliver Value Chain – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSE Pattern School)

## ACHIEVEMENT




### வாய்க்குக் காவல்

நாம் பேசுவதற்கு முன்பாக என்ன பேசுகிறோம் என்பதைச் சிந்தித்துப் பேசும் வழியை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. "குதிப்பதற்கு முன்பாக என்ன இருக்கிறது என்று கவனித்து குதி" என்பது அந்த பழமொழி. அது போலவே நாம் பேசியதற்குப் பிறகு பேசிய வார்த்தைகளை வாபஸ் வாங்க முடியாமல் பேசியதற்கு மன்னிப்புக் கேட்பது வேதனையான ஒரு காரியம்.

சோறு விழுந்தால் எடுத்து விடலாம் சொல் விழுந்தால் எடுக்க முடியுமா? என்று கேட்பார்கள். கிராம மக்கள் சிலருடைய வாயில் இருந்து வரும் வார்த்தைகள் துப்பாக்கியிலிருந்து வெளிப்படும் குண்டுகளைப் போல மற்றவர்களுடைய இருதயத்தைத் துளைத்து அவர்களை சாகடித்துவிடும். நாவு சிறிய அவயமாக இருந்தாலும் வீம்பானவைகளை பேசும். நாம் பேசுவதற்கு முன்பாக நாம் பேசுகிற வார்த்தைகள் உண்மையானவைகளா என்று யோசிக்க வேண்டும்.

பொய் பேசுவதை எண்ணி பெருமை பேசுவார்கள். இன்னும் சிலர் அரைகுறையாக விஷயத்தை விவரித்து பூரண உண்மையை மறைத்து மற்றவர்கள் மனதில் வேறு எண்ணத்தை உண்டாக்கி விடுவார்கள். நம் வார்த்தையில் அன்பு இருக்கட்டும். நம் வாயிலிருந்து வரும் வார்தைகள் உண்மையானதாகவே இருக்கட்டும்! இந்த உலகத்தின் வழியாக ஒரே ஒரு முறைதான் கடந்து செல்லுகிறீர்கள். ஆகவே உங்கள் வார்த்தைகள் அன்பினால் நிரம்பியதாய் இருக்கட்டும்!.

தொகுத்தளித்தவர் : Ms. P.E. Nancy
Director – Admin

### ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி என்பதன் உண்மையான விளக்கம்.

அறிந்த விளக்கம் : ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டிதான்.

அறியாத விளக்கம் :

ஐந்து பெற்றால் என்பதில் வரும் அந்த ஐந்து விஷயங்கள்...

1. ஆடம்பரமாய் வாழும் தாய்.
2. பொறுப்பில்லாமல் வாழும் தந்தை.
3. ஒழுக்கமற்ற மனைவி.
4. ஏமாற்றுவதும் துரோகமும் செய்யக் கூடிய உடன் பிறந்தோர் மற்றும்
5. சொல் பேச்சு கேளாத பிடிவாதமுடைய பிள்ளைகள் என்பதாகும்.

இவர்களை கொண்டிருப்பவன், அரசனே ஆனாலும் கூட அவனது வாழ்க்கை வேகமாய் அழிவை நோக்கி போகும் என்ற அர்தத்திலேயே ஆண்டி என்ற பிரயோகம்.

Compiled by : Mr. Shahul Hameed Bava
Service Provider

## FUNCTIONAL WISHES





**Christmas**
**25th December**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr. G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 044 - 22294565 |
| | M/s. Jeya Clinic, |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைான்
மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை
வளர்ப்பினிலே!

**Mrs. M. Indumathy** — **6th Dec.**
Purchase



**Mr. R. Dayanithi** — **8th Dec.**
Production

**Mr. S. Purushothaman** — **10th Dec.**
Fib Tech

**Mr. Velappan Jeyakummar** — **12th Dec.**
Managing Director

**Mr. P. Prem Kumar** — **13th Dec.**
Production

**Best Wishes from Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

உலகின் ஏழு அதிசயங்கள் வகுப்பில் மாணவர்களிடம் எழுதச் சொன்னார் ஆசிரியர். ஒரேயொரு மாணவிதான் சரியான விடைகள் எழுதினாள். இதோ அந்த விடைகள்.

1. பார்க்கும் திறன்
2. கேட்கும் திறன்
3. தொடும் உணர்வு
4. சுவை உணர்வு
5. பேசும் ஆற்றல்
6. சிரிப்பு
7. அன்பு

இத்தனை அதிசயங்கள் நம்மிடம்தானே உள்ளன.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## உன்னையே நீ அறிவாய்!– "சாக்ரடீஸ்"

"நீங்கள் வாழ்வதற்குப் புறப்படுங்கள், நான் விடைபெறுகிறேன்!" என நீதிபதிகளைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, கை கால்களில் பூட்டப்பட்டிருந்த விலங்குடன் சிறைக்கூடத்துக்குள் நடந்தார் சாக்ரடீஸ். சிறைப் பணியாளர்கள், சீடர்கள், மனைவி, மக்கள் அனைவரும் சுற்றி நின்று விம்மி அழுத சூழலிலும், மகிழ்ச்சி குறையாமல் தனக்கான நஞ்சுக் கோப்பையை வாங்கிக் கொண்டார்.

"நஞ்சினை இப்போதே பருக வேண்டியதில்லை. சற்றுநேரம் கழித்துப் பருகலாம்" என சிறைக் காவலர் அன்புடன் சொல்ல, "காலம் தாழ்த்துவதால், உங்கள் அனைவருக்கும் இல்லம் திரும்பத் தாமதமாகலாம். அதனால், இப்போதே குடிக்கிறேன்" என்றபடி, ஒரு சொட்டு கூட மிச்சம் வைக்காமல் குடித்து முடித்தார்.

"உங்கள் இறுதிச் சடங்கு எப்படி அமைய வேண்டும்." என ஒரு நண்பர் கேட்க "மரணத்துக்குப் பின் என்னை உங்களால் பிடிக்க முடியாது, என் உடலை என்ன செய்தாலும் அதனால் எந்தப் பயனும் இல்லை" என்ற சிரிப்புடன் சாக்ரடீஸ் மரணத்தை வரவேற்க குறுக்கும் நெடுக்குமாய் வேகவேகமாக நடக்கத் துவங்கினார். விஷம் அவரது உடம்பில் கிறுகிறுவென்று பரவி, சில விநாடிகளில் விடைபெற்றார் சாக்ரடீஸ்.

அந்தக் காலத்தில் மதம், அரசு இரண்டையும் அப்படியே ஏற்றுக் கொள்வதே கிரேக்கர்களின் மரபு. சாக்ரடீஸ் அதை முதலில் உடைக்க விரும்பினார். விவாதங்கள் தத்துவங்களை அள்ளித் தெளிப்பார். மூடத்தனங்களை எதிர்த்தார். அநியாயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

கிரேக்கக் கடவுளை நிந்தித்து புதிய மதத்தைப் பரப்பி, இளைஞர்களை கெடுக்கப் பார்க்கிறார் என்ற குற்றச் சாட்டுதான் எழுபதாவது வயதில் இவர் மீது சுமத்தப்பட்டது. 'மன்னிப்புக் கேட்டால் உயிர் பிழைக்கலாம்' என நீதிபதிகள் சொன்னபோதும், "உயிரைவிட என் கருத்துக்கள் உயர்ந்தவை" என மரணத்தைத் தழுவினார்.

சாக்ரடீஸின் மந்திரம் "உங்களை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்". அதுதான் உண்மையான அறிவு **உன்னையே நீ அறிவாய்!** அதன் பிறகே உன்னைச் சுற்றி நடப்பதை அறிய முடியும், வாழ்வை வெல்ல முடியும்!

–மந்திரச் சொல் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## தெரிந்து கொள்வோம்

### பழமொழிகள்

1. நல்ல வரவேற்பே பாதி விருந்து

— ஜப்பான்

2. வாக்குறுதி என்பது ஒரு வகையில் கடனே.

— ஆப்பிரிக்கா

3. உங்களுக்காக பொய் சொல்கிறவன், உங்களுக்கு எதிராகவும் பொய் சொல்வான்.

– அமெரிக்கா

4. பயந்தவன் பத்து தைரியசாலிகளைக் கூட பயந்தாங்கொளியாக ஆக்கிவிடுவான்.

– ஜெர்மன்

5. ஒருவன் சிரிக்கும் போதெல்லாம் அவரது மரணம் தள்ளிப் போடப்படுகிறது.

– இத்தாலி

6. இனாமாக ஒன்றைப் பெற்றுக் கொள்வதால் உங்களுடைய சுதந்திரம் குறைகிறது.

— போலந்து

7. ஒரு மனிதனின் பெருமையும், சிறுமையும் அவனது இதயத்துக்குள் இருக்கின்றன.

— சீனா

8. முதல் தவறு, இரண்டாவது தவறுக்கு இருக்கையைத் தயார் செய்கிறது.

— ரஷ்யா

Compiled by : Mrs. G. Kalaivani
System Admin

## Benefits of Cucumbers



1. Relives joint paint (arthritis / gout)
2. Reduces Cholesterol
3. Aids in Weight loss
4. Promotes Digestion
5. Prevents Headaches
6. Fights Cancer
7. Rehydrates & Remineralizes the body
8. High silica content for silky hair
   Cures Diabetes
9. Controls blood pressure

Compiled by : Mr. D.S. Anish
System Admin

## உத்தமம்

ஒரு ஊரில் ஒரு முனிவர் இருந்தார். அவரைப்பார்க்க நான்கு பேர் வந்திருந்தார்கள். முனிவரிடம் அந்த நான்கு பேரும் “சாமி உலகத்தை புரிந்துக் கொள்ளவே முடியவில்லை அதற்கு என்ன வழி” என்று கேட்டார்கள். அதற்கு அந்த முனிவர் “தெரியவில்லை” என்று ஒற்றை வரியில் பதில் சொல்லிவிட்டார். ஆனாலும் வந்தவர்கள் விடாமல், “என்ன சாமி நீங்க எவ்வளவு பெரிய முனிவர் இது கூடத் தெரியவில்லையென்று சொல்கிறீர்களே!” என்று கேட்டார்கள். அதற்கு முனிவர் அவர்களிடம் “சரி நான் உங்களை ஒரு புஷ்பகவிமானத்தில் அழைத்துக் கொண்டு போவேன். போகும் வழியில் ஒரு காட்சியை உங்களுக்கு காட்டுகிறேன். அதைபற்றிய உங்களுடைய கருத்துகளை நீங்கள் தெரிவிக்க வேண்டும். தவறாக இருந்தால் உங்களை இந்த விமானம் கீழே தள்ளிவிடும் இதற்கு சம்மதம் என்றால் என்னுடன் வாருங்கள் என்று முனிவர் அழைத்துச் சென்றார்.

விமானத்தில் ஏறி சிறிது தூரம் சென்றதும் ஒரு இடத்தில் புலி குட்டிபோட்டுக் கொண்டிருந்தது. பின் தனக்கும் குட்டிகளுக்கும் பசிக்கு இரை தேடி சென்றது. சென்ற இடத்தில் ஒரு மான் குட்டி போட்டு விட்டு பசிக்குத் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. உடனே புலி அந்த மானைக் கொன்று தானும் சாப்பிட்டுவிட்டு குட்டிகளுக்கும் கொடுத்தது.

இந்தக் காட்சியை அவர்களிடம் காட்டிய முனிவர் இதைப்பற்றிய உங்கள் கருத்து என்ன என்று நான்கு பேரில் ஒருவரிடம் கேட்டார். அதற்கு அவர் “இது மிகப் பெரிய தவறு மானுடைய குட்டிகளுக்கு தாய் இல்லாமல் போய்விட்டது” என்று கூறினார். உடனே அவரை அந்த விமானம் கீழே தள்ளிவிட்டது. அடுத்தவரைப் பார்த்து முனிவர் கேட்டார், “உங்கள் கருத்து என்ன?” ஏற்கனவே ஒருத்தர் கீழே விழுந்ததைப் பார்த்தவர் “இது சரிதான், ஏனென்றால் புலிகளுக்கு இறையாகத்தானே மான்கள் இருக்கின்றன” என்று கூறினார். உடனே அவரையும் அந்த விமானம் கீழே தள்ளிவிட்டது. இதையெல்லாம் பாத்துக் கொண்டிருந்த அடுத்தவர் மிகவும் உஷாராகச் சொன்னார், “இது தப்பும் இல்லை சரியும் இல்லை” என்று உடனே அவரையும் அந்த விமானம் கீழே தள்ளிவிட்டது. கடைசியாக விமானத்தில் இருந்தவரைப் பார்த்து முனிவர் கேட்டார் “உங்கள் கருத்து என்னவென்று” அதற்கு அவர் “தெரியவில்லை சாமி” என்று கூறினார். இம்முறை அந்த விமானம் கீழே தள்ளிவிடவில்லை.

இந்தக் கதையின் நீதி என்னவென்றால், நம் வாழ்க்கைக்கு எது தேவையோ அதை மட்டும் நாம் தெரிந்துக் கொண்டால் போதும், தேவையில்லாத விஷயங்களை தெரிந்துக்கொள்ள முயற்சி செய்வது அநாவசியம். தெரியாத விஷயங்களை தெரியாது என்று ஒத்துக்கொள்வது உத்தமம்.

Compiled by : Mr. S. Sivakumar
Marketing

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி XVI)

**பயன்படுவதும் பயன்படாததும்**

இதனால்தான், ஒரு பொருள் வீணாகிவிட்டது, இனிமேல் அதனால் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்று தெரிந்தால்கூட, நம்மில் பலருக்கு அதைத் தூக்கி வீசுவதற்கு மனமே வருவதில்லை. ஏதோ ஒரு மாய மந்திரம் நடந்தது. அது தானாகச் சரியாகிவிடும் என்று நம்ப விரும்புகிறவர்கள்போல், அதை ஒரு மூலையில் போட்டுவைக்கிறோம்.

பிரச்சனை என்னவென்றால், நம் அறையில் நான்கு மூலைகள்தான் இருக்கின்றன. அவற்றில் இது போன்ற வீணான, பயன்படாத பொருள்களைக் குவித்து நிரப்பினால், ஒரு கட்டத்தில் பயன்படக்கூடிய பொருள்களை வைப்பதற்கு இடமில்லாதபடி அவை நம்மை மூழ்கடித்து விடாதா?

## கவிதைகள்

### மரணம்

மரணத்தைப் பற்றி கவலைப்படாதே,

நீ இருக்கும் வரை அது வரப்போவதில்லை.

அது வரும்போது நீ இருக்கப்போவதில்லை,

பிறகு எதற்கு கவலை.

Compiled by : Mr. C. Abilash
Facilitation

### கற்றுக் கொள்

தாயிடம் கற்றுக்கொள் பாசத்தை!

தந்தையிடம் கற்றுக்கொள் உலகை!

ஆசிரியரிடம் கற்றுக்கொள் அறிவை!

நண்பர்களிடம் கற்றுக்கொள் நல்லப் பழக்கத்தை!

குழந்தைகளிடம் கற்றுக்கொள் களிப்பை!

காக்கையிடம் கற்றுக்கொள் கூடிவாழ!

நாயிடம் கற்றுக்கொள் நன்றியை!

நரியிடம் கற்றுக்கொள் தந்திரத்தை!

இவை அனைத்தும் நாம் கற்றுக் கொண்டால்

நம் வாழ்வே வசந்தமாகும்.

Compiled by : Mr. G. Janarthanan
Fibtec

### உடன்

யாருமில்லை என்று
யாரிடமும் சொல்லாதே!
உடல் வலியாயினும்
மனதின் வேதனையாயினும்
உன் அழைப்பின்றி
உடன் விரைந்து வருவேன்.

இப்படிக்கு
–கண்ணீர்த்துளிகள்

## சிந்தனைக்கு

- இருப்பதைப் பற்றிக் கொள்ளும்
  பலசாலியாக இரு!
  இழப்பினை எதிர்கொள்ளும்
  தைரியசாலியாகவும் இரு!

- <u>உத்வேகம் அளிக்கும் மந்திரம்</u>
  நம்பிக்கை என்பது ஆற்றலின் சிறந்த
  நண்பன், இது
  வெற்றிக்கான ஆதாரமாகவும் இருக்கிறது.

Compiled by : Mr. K. Manivannan
Fibtec

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.

– Editor

'பொன்னியின் புதல்வர்' கல்கி ஒருமுறை எங்கோ வெளியூருக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தபோது, இரயிலுக்கு மிகவும் நேரமாகிவிட்டது. அவசரமாக ஓடி வந்து எப்படியோ இரயிலைப் பிடித்துவிட்டார். ஆனால் அவருடைய செருப்பு ஒன்று தவறி பிளாட்ஃபாரத்தில் விழுந்துவிட்டது.

உடனே கல்கி, 'ஐயோ, செருப்பு போச்சே!' என்று அலறவில்லை, பதறவில்லை. மாறாக தன்னுடைய இன்னொரு காலில் இருந்த செருப்பையும் கழற்றி, அதே பிளாட்ஃபாரத்தின் மீது வீசிவிட்டார்.

இதைப் பார்த்த நண்பர் ஒருவர், 'ஏன் இப்படிச் செய்தீர்கள்?' என்று ஆச்சரியத்தோடு விசாரித்தார். 'அந்த ஒற்றைச் செருப்பால் எனக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை. பிளாட்ஃபாரத்தில் விழுந்துவிட்ட அந்த இன்னொரு செருப்பு நிச்சயமாக இனிமேல் எனக்குக் கிடைக்கப் போவதில்லை!' என்றார் கல்கி. 'அது புரிகிறது, ஆனால் ஏன் இன்னொரு செருப்பையும் கழற்றி வீசினீர்கள்?' என்றார் கல்கி.

'நான் தவறவிட்ட அந்தச் செருப்பை, யாராவது கண்டெடுப்பார்கள். அந்த ஒற்றைச் செருப்பு அவர்களுக்கும் பயன்படாது' என்று சிரித்த கல்கி, 'அதனால்தான், என்னிடமிருந்த இன்னொரு செருப்பையும் அங்கேயே வீசிவிட்டேன்! அவர்களாவது அந்தச் செருப்புகளை முழுசாகப் பயன்படுத்தட்டுமே!' என்றார்.

நம்மிடம் இருக்கும் பயன்படாத, வீணான பொருட்கள் எல்லாமே, இந்தச் சம்பவத்தில் வருகிற ஒற்றைச் செருப்புகளைப்போல்தான். 'எதற்கும் இருக்கட்டும்!' என்று ஒற்றைச் செருப்புகளையெல்லாம் அநாவசியமாகப் பத்திரப்படுத்தி வைப்பது வீண் வேலை.

ஆனால், அந்தப் பொருட்களெல்லாம் பயன்படாதவை என்று எப்படிச் சொல்லமுடியும்? 'சிறு துரும்பும் பல் குத்த உதவும்!' என்று பழமொழியில் சொல்வதுபோல், அவையும் என்றைக்காவது ஒரு நாள் உபயோகப்படாதா என்ன?

உபயோகப்படலாம், உண்மைதான். ஆனால் அந்த 'என்றைக்காவது ஒரு நாள்' தெருமுனையில் தென்படும்வரை, அந்தப் பொருட்களைக் கொஞ்சம் ஓரமாகவேனும் நகர்த்தி வைக்கக் கூடாதா?

இதைத்தான் 'செய்ரி' கேட்கிறது. எது தேவை, எது தேவையில்லை என்று உடனடியாக ஒரு கணக்கு போடுங்கள். இல்லாவிட்டால் உங்களுடைய சுற்றுப்புறத்தை எப்போதும் ஒழுங்குபடுத்த முடியாது என்று அடித்துச் சொல்கிறது.

தொடரும்...

## HYDRO-GEN DEALERS MEET

